தரம் 8

சுகாதாரமும் உடற்கல்வியும்

அலகு 13




# விளையாட்டுப்பான்மைப் பண்புகளை விருத்தி செய்வோம்

சி. பவனிதரன்
பது / கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயம், பசறை

# விளையாட்டு பண்புகளை விருத்தி செய்து கொள்வோம்

## விளையாட்டு விதிமுறைகள்

விளையாட்டொன்றை சரியாக நடாத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒழுக்க நெறிகள் விதிமுறைகள் எனப்படுகின்றன.



# விதிமுறைகளின் வளர்ச்சி




ஆதிகால மனிதன் தனது அன்றாடச் தேவைகளை தனது செயற்பாடுகள் மூலம் நிவர்த்தி செய்து கொண்டான்

- நீச்சலடித்தல்
- மிருகங்களின் பின்தொடர்ந்து விரட்டுதல்
- மிருகங்களை வேட்டையாடுதல்
- மரம் ஏறுதல்
- தேன் எடுத்தல்
- நீர் கால்வாய்களுக்கிடையே பாய்ந்து செல்லல்
- மலைகளில் ஏறுதல்
- இன்னும் பல.....

# விளையாட்டு விதிமுறைகளின் வளர்ச்சி



ஆதி கால மனிதன் கடவுள் நம்பிக்கையோடு செயற்பட்டிருந்ததோடு கடவுளுக்கு சமய வழிபாட்டுகள் நடாத்தும் போது விழாக்கள்,சடங்குகள், உற்சவங்கள், நடனம் ஆகியவற்றுடன் விளையாட்டுகளையும் சேர்த்துகொண்டதாக கூறப்படுகின்றன.



அன்றாட
செயற்பாடுகளினூடாக
உருவாகிய விளையாட்டுக்கள்
நிர்வாகிகளின் தேவைக்கேற்ப
போட்டி தன்மை
கொண்டவையாக
நடத்தப்பட்டன


விளையாட்டுப் போட்டிகள் நடாத்தும் போது விதிமுறைகள்,சட்டத்திட்டங்கள் சேர்த்துக்கொள்ளாமை காரணமாக விபத்துக்களும்,உயிரிழப்புக்களும்




## விபத்துக்களையும் உயிரிழப்புகளையும் தவிர்க்கும் முகமாக விதிமுறைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன.




தற்காலத்தில் விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படுகின்ற போட்டிகள் முதல் முதலில் கிரேக்க யுகத்தில் ஏதென்ஸ், ஸ்பார்ட்டா போன்ற புராதன நகரங்களில் நடைபெற்றதாக வரலாற்றுச் சான்றுதல் மூலம் தெரியவருகின்றன.






Der heilige Ambrosius und Kaiser Theodosius.



கி.மு முன் 776 கிரேக்கத்தின் ஏதன்ஸ் நகரில் ஒலிம்பியா நகரில் முதல் முதலில் ஒலிம்பிக் விழா நடைபெற்றது





சமூக முன்னேற்றத்தோடு புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் அனுபவங்களின் செல்வாக்கு காரணமாகவும் பல்வேறு நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும் விளையாட்டுக்களும் மாற்றங்களுக்குட்பட்டு தற்போது ஒழுங்கமைக்கபட்ட தன்மையை அடைந்துள்ளன.

# விளையாட்டுப் பான்மையோடு தொடர்புடைய தேர்ச்சிகள்




- தலைமைத்துவம்
- பின்பற்றுதல்
- குழு உணர்வு
- ஆளிடைத் தொடர்புகள்
- வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளுதல்
- நியாயபூர்வமான போட்டி

# தலைமைத்துவம்



- பொறுமையுடன் செயல்படுதல்
- முழுமையான ஈடுபாடு
- மனவெழுச்சி கட்டுப்பாடு
- குழு உணர்வு
- சிறந்த கூட்டுறவு
- விளையாட்டு விதிமுறைகள் தொடர்பான அறிவு
- குழுவை வழிநடத்தும் திறன்
- சரியான தீர்வை கண்டறியும் ஆற்றல்
- குழுவின் கௌரவத்தை பேணுதல்
- குழுவின் உரிமையை பாதுகாத்தல்

# பின்பற்றுதல்



- தலைமைக்கு மதிப்பளிதல்
- அறிவுரத்தல்களை பின்பற்றதுதல்
- தேவை ஏற்படும் பட்சத்தில் தலைவராக செயற்படல்
- பொறுப்புகளை சரியாக நிறைவேற்றல்

# குழு உணர்வு



- தீர்மானங்கள் குழுவுணர்வுடன் எடுத்தல்
- ஒற்றுமையுடன் செயற்படுதல்
- ஆர்வத்துடன் பங்கெடுத்தல்
- அணியின் வெற்றிக்காக செயற்படுதல்

# ஆளிடைத் தொடர்புகள்



- வெவ்வேறு வீரர்களை இனங்கண்டு செயற்படுதல்
- பயிற்றுவிப்பாளர்,வீரர்கள், மத்தியஸ்தர்களிடையே சிறந்த தொடர்பை பேணுதல்
- விமர்சனங்களை பொறுமையுடன் சகித்துக்கொள்ளல்
- ஒருவரையொருவர் மதித்தல்

# • வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளுதல்




- வெற்றியின் போது தேவையற்ற விதத்தில் நடப்பதை தவிர்த்தல்
- ஏதிர் அணியினருக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு நடந்து கொள்ளல்
- துக்கம் ,கோபம் மனவெழுச்சிகளை கட்டுபடுத்த கூடியாதாக இருத்தல்
- விளையாட்டின் கௌரவத்தை பேணுதல்



# விளையாட்டு ஒழுக்க நெறிகள்

விளையாட்டு விதிமுறைகளைச் செவ்வனே பேணுவதற்குத் தேவையான நற்பண்புகள்,சம்பிரதாயங்கள் மற்றும் நன்னடத்தைகள் என்பன விளையாட்டு ஒழுக்க நெறிகளாக கருதப்படுகின்றன.



# விளையாட்டு வீரர் ஒருவர் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிகள்

- விதி முறைகளை மதித்தல்
- தீர்ப்புகளை மதித்தல்
- ஏதிரணியினரை மதித்தல்
- பார்வையாளர்களை மதித்தல்
- ஊடகவிலாளர்களை மதித்தல்
- பயிற்றுவிப்பாளரை மதித்தல்
- ஆசிரியரை மதித்தல்





# விளையாட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுக்க நெறிகளுக்கு இணங்க நடப்பதன் மூலம் கிட்டும் அனுகூலங்கள்

- விளையாட்டின் கௌரவம் பாதுகாக்கப்படுதல்
- போட்டி மத்தியஸ்தம் இலகுவாதல்
- சமாதானம் பாதுகாக்கப்படுதல்
- முரண்பாடுகளை தீர்ப்பது இலகுவாகுதல்
- வெற்றி தோல்விகளில் சமமாக ஏற்கும் ஆற்றல் கிடைத்தல்
- நட்புறவு விருத்தியாதல்
- ஒற்றுமை அதிகரித்தல்



# சுகாதாரமும் உடற்கல்வியும்

## அலகு - 13



## விளையாட்டுப்பான்மைப் பண்புகளை விருத்தி

சி. பவனிதரன்
பது / கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயம்,
பசறை